**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 453/2023**

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் நாள் வியாழக் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 31.07.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | அஜிசன் ஒட்ஸ் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் மேலாளர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

06.03.2017 கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகவும்

06.03.2017 கொதுவை ஒப்பந்தம் வா.சா.ஆ. 2 ஆகவும்

19.08.2022 கடன் ஏற்பாட்டு கடிதம் வா.சா.ஆ. 3 ஆகவும்

26.07.2023 கணக்குபேரேட்டு நகல் வா.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

தாவா படி தீர்வாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**